முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2022**, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் மகா சக்தியே
   அண்ணலாக வந்த தவசியே
   வரம் பெற்று கலியுகம் காக்க
   வள்ளலாக வந்த ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
   ஞாலமதில் பிலவ கலை திங்கள்
   இனிமைபட அட்டமதிகதி புகர் வாரம்
   **(**பிலவ வருடம் தை மாதம் **8**ம் நாள், **21.01.2022** வெள்ளிக்கிழமை**)**
   இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை மதுரகவி ஆழ்வாரும்
   அருளுவேன் உலக நலம் பெற
   நேசக்கரம் நீட்டி அரங்கன்தரும்
   ஞான உபதேசங்களை உலகோர்
4. உலகோர் வரமாக ஏற்று
   உத்தமம்பட தொடர்ந்து வருக
   காலமதில் கலியுக மக்களுக்கு
   கந்த வேலன் அருள்பலமாகக் கிட்டி
5. கிட்டியே வாழ்வில் தேற்றமும்
   குறைவிலா அருள் பொருள்பலமும்
   தட்டாது வளர்ச்சிகளாகக் கூடி
   தரணியோர் ஞான பலமும் அடைவர்
6. அடையவே கலியில் மாற்றம் தர
   ஆறுமுகனே அமைத்த குடிலாம்
   இடர்வெல்லும் பிரணவக் குடிலை
   எல்லா மகா சக்திகளும் அலங்கரித்து வர
7. வருகவே பிரணவக் குடிலில்
   வாழும் கடவுளாக அரங்க ஞானி
   தரும வேலி போட்டு அருளிவர
   தட்டாது குடிலின் தொடர்பும்
8. தொடர்பும் ஞானியர் ஆசியும்
   தொண்டுமாகத் தொடரும் மக்களுக்கு
   இடர்களென்பதே இல்லாத வண்ணம்
   எல்லா சித்திகளும் கண்டடைந்து
9. அடைந்துமே எல்லா வகையும்
   ஆனந்தமும் மன அமைதியும்
   தடையின்றி சர்வ சித்தியும்
   தவபலமுமாக நிலைகள் உயரும்

10. உயரவே உலகம் எங்கிலும்
உண்மையானவர்களின் தலைமை
தயவான ஆளுமையாக மாறி
தரணியே ஞான ஆட்சிபெறும்

11. ஆட்சிமாற்றம் ஞானிகள் சூழ
அரங்கமகான் கலியுகத்தில்
மாட்சிமைபட ஞான ஆட்சியாக்கிட
மக்களே அரங்கனை நோக்கி வாரீர்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—